நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW Federation of Tamil Schools Inc.

# 2020

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

**தரம்: இடைநிலை மத்திய பிரிவு (ஆண்டு 7, 8)**

**Level : Mid Intermediate (Year 7 & 8)**

**வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்**

Time Given : 90 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

November 2020

**I. கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக. (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

1. மலையின் உச்சியிலிருந்து பேசிய கண்ணனின் குரல் பலமுறை **எதிரொலித்தது.**

(அ) எதிரொலித்த + அது (ஆ) எதி + ரொலித்தது

(இ) எதிரொலி + இத்தது (ஈ) எதிர் + ஒலித்தது

2. ஓய்வு நேரத்தில் **பூங்கன்று** வளர்த்தல் ஒரு சிறந்த பொழுதுபோக்கு.

(அ) பூங் + கன்று (ஆ) பூங்க + அன்று

(இ) பூ + கன்று (ஈ) பூ + அங்கன்று

3. சிட்னியின் **வடபகுதியில்** பிரிஸ்பேன் உள்ளது.

(அ) வடக்கு + பகுதியில் (ஆ) வட + பகுதியில்

(இ) வடை + பகுதியில் (ஈ) வடப் + பகுதியில்

4. **செந்தமிழ்** நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே.

(அ) செந் + தமிழ் (ஆ) செம்மை + தமிழ்

(இ) செ + தமிழ் (ஈ) செந்த + தமிழ்

5. நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் **நாட்டுப்பற்று** அவசியமாகும்.

(அ) நாடு + பற்று (ஆ) நாட்டு + பற்று

(இ) நாட் + பற்று (ஈ) நா + பற்று

**II. பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

**(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

6. தமிழ் மிகவும் **தொன்மையான** மொழி.

(அ) புதுமையான (ஆ) பழமையான

(இ) பெருமையான (ஈ) சீர்மையான

7. **பூஞ்சோலையில்** மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

(அ) நந்தவனத்தில் (ஆ) பூக்கூடையில்

(இ) பூக்கடையில் (ஈ) நெடுஞ்சாலையில்

8. கொரோனா தொற்று தனி நபர் **ஆரோக்கியத்தின்** முக்கியத்துவத்தை உலகத்திற்கு உணர்த்தியது.

(அ) நோயின் (ஆ) உடல் நலத்தின்

(இ) ஆர்வத்தின் (ஈ) சுத்தத்தின்

9. நீண்ட நேர விமானப் பயணம் எவரையும் **சோர்வடையச்** செய்யும்.

(அ) சோகமடைய (ஆ) மகிழ்ச்சியடைய

(இ) களைப்படைய (ஈ) தலைசுற்ற

10. குமரன் பள்ளிக்கு நேரமாகியதால் **அரக்கப்பரக்கச்** சாப்பிட்டான்.

(அ) சோர்வாக (ஆ) மெதுவாக

(இ) அவசரமாக (ஈ) சிறப்பாக

## III. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

11. அகநானூறைத் தொகுத்தவர்

(அ) இளங்கோ அடிகள் (ஆ) பாரதியார்

(இ) ஔவையார் (ஈ) உருத்திரசன்மன்

12. வீரபாண்டிய கட்டபொம்மன் ஒரு

(அ) குத்துச்சண்டை வீரர் (ஆ) மன்னன்

(இ) முதல்அமைச்சர் (ஈ) சிற்பி

13. வயலும் வயல் சார்ந்த இடமும்

(அ) முல்லை (ஆ) குறிஞ்சி

(இ) மருதம் (ஈ) பாலை

14. அனைவரும் படிக்கப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடம்

(அ) நூலகம் (ஆ) அருங்காட்சியகம்

(இ) பூங்கா (ஈ) வங்கி

15. தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு

(அ) கால்ப்பந்து (ஆ) கூடைப்பந்து

(இ) ஏறுதழுவுதல் (ஈ) மட்டைப்பந்து

## IV. பின்வரும் 16 முதல் 20 வரையிலான வினாக்களில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க. **(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

16. (அ) தொற்றுநோய் (ஆ) மலேரியா

(இ) மஞ்சள்காமாலை (ஈ) காலரா

17. (அ) வாத்து (ஆ) பருந்து

(இ) கங்காரு (ஈ) கொக்கு

18. (அ) நெடுஞ்சேரலாதன் (ஆ) அசோகர்
(இ) சுந்தர பாண்டியன் (ஈ) கரிகாலன்

19. (அ) இன்பம் (ஆ) அறம்
(இ) தருமம் (ஈ) ஈகை

20. (அ) அக்கா (ஆ) மாமா
(இ) தங்கை (ஈ) நண்பன்

**V. பின்வரும் 21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க. (மதிப்பெண்கள்: 5 x 1 = 5)**

21. முற்பகல் செய்யின் பிற்பகல் ……………………………………..
(அ) தரும் (ஆ) வராது
(இ) விளையும் (ஈ) தராது

22. …………………………………….. அழகு முகத்தில் தெரியும்
(அ) கரத்தின் (ஆ) அகத்தின்
(இ) சிரத்தின் (ஈ) புறத்தின்

23. அளவுக்கு மிஞ்சினால் …………………………………….. நஞ்சு
(அ) தேனும் (ஆ) பழரசமும்
(இ) பஞ்சமிருதமும் (ஈ) அமிர்தமும்

24. …………………………………….. வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
(அ) ஆலும் (ஆ) மயிலும்
(இ) பாம்பும் (ஈ) வேம்பும்

25. ஆலை இல்லாத ஊரில் …………………………………….. சர்க்கரை
(அ) ரோஜாப்பூ (ஆ) இலுப்பைப்பூ
(இ) தாமரைப்பூ (ஈ) மகிழம்பூ

**VI. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்க. (மதிப்பெண்கள் 4 x 2 = 8)**

26. பாரதியார் புதுக்கவிதை எழுதுவதில் சிறந்து விளங்கினார்.
புதுக்கவிதை எழுதுவதில் ……………………………………………………………………………

27. கடற்கரையோரத்தில் புயலினால் படகு ஒதுங்கியது.
புயலினால் ……………………………………………………………………………………………

28. தமிழ் மொழி கற்க நாங்கள் வாரந்தோறும் பள்ளிக்குச் செல்கிறோம்

வாரந்தோறும் ..........................................................................................................................................

29. கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்தியது

அரசு ..........................................................................................................................................

## VII. கோடிட்ட பிழையுள்ள சொற்களை திருத்தி எழுதுக.

**(மதிப்பெண்கள் 5 x 2 = 10)**

உலகில் எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஒரு (30) **காரனத்தால்** நேரிடும் சம்பவம், உலகின் மற்ற பாகங்களையும் பாதிக்கும் சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம். சீனாவில் உள்ள வுஹான் மாநிலத்தில் முதலில் (31) **கண்டரியப்பட்ட** கொரோனா தொற்று, தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது. இந்தத் தொற்று உலகெங்கும் (32) **பள்ளாயிரக்கணக்கான** மக்களிடம் பரவி உலகத்தையே (33) **அச்சுருத்தி** வருகிறது. நாம் இதைக்கண்டு பயம் கொள்ளாமல் அரசாங்கம் மற்றும் வல்லுனர்களின் (34) **வளிகாட்டுதலைக்** கடைப்பிடித்து “இதுவும் கடந்து போகும்” என்பதை மனதில் ஏற்று வாழ்க்கையில் பயணிப்போம்.

30. ..........................................................................................

31. ..........................................................................................

32. ..........................................................................................

33. ..........................................................................................

34. . ..........................................................................................

## VIII. பேச்சு வழக்கில் உள்ள சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றுக.

**(மதிப்பெண்கள் 9 x 1 =9 )**

35. வாசிப்புப்பழக்கம் என்பது சுயமாக ஏற்பட வேண்டியது. (அ) **அத** யாரும் யாருக்கும் திணிக்க முடியாது, திணிக்கவும் கூடாது. ஆனாலும் பிள்ளைகளுக்கு (ஆ) **வாசிப்பதில** (இ) **ஆர்வத்த** ஏற்படுத்த வேண்டிய (ஈ) **முதற்கடம** பெற்றோர்களுக்கே உண்டு. அக்கடமையை (உ) **என்னட** பெற்றோர்களே (ஊ) **செய்துள்ளாங்க** என்று (எ) **எண்ணுறன்**. என் ஆசிரியர்கள் சிலரும் (ஏ) **வாசிப்பிட** அருமையை உணர்த்தியிருக்கிறார்கள். நான் சிறு வயதிலிருந்தே வாசிக்கத் (ஐ) **தொடங்கிட்டதா** என் பெற்றோர்கள் கூறுவார்கள்.

வாசிப்புப்பழக்கம் என்பது சுயமாக ஏற்பட வேண்டியது. (அ) ………… யாரும் யாருக்கும் திணிக்க முடியாது, திணிக்கவும் கூடாது. ஆனாலும் பிள்ளைகளுக்கு (ஆ) ……………. (இ) …………….. ஏற்படுத்த வேண்டிய (ஈ) ………….. பெற்றோர்களுக்கே உண்டு. அக்கடமையை (உ) ………. பெற்றோர்களே (ஊ) ……………….என்று (எ) ………………….. . என் ஆசிரியர்கள் சிலரும் (ஏ) ……………. அருமையை உணர்த்தியிருக்கிறார்கள். நான் சிறு வயதிலிருந்தே வாசிக்கத் (ஐ) ………………… என் பெற்றோர்கள் கூறுவார்கள்.

**IX. பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து கீழ்வரும் 36 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை எழுதுக.**

**(மதிப்பெண்கள் 5 x 3 = 15)**

திருப்பூர் குமரன் இந்திய விடுதலைப் போராட்ட தியாகி ஆவார். இவர் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார். பதினெட்டு வயது நிரம்பியிருந்த குமரன், தந்தைக்கு உதவியாக துணிகளை தலையில் சுமந்து திருப்பூர் வரை கொண்டு செல்வார். குமரன் சுயமாக நெசவு செய்தும் குடும்பம் நடத்த முடியாமல் போகவே, வேறு வேலை தேடி திருப்பூருக்கே குடும்பத்துடன் இடம் பெயர்ந்தார்.

1932 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கியது. அப்போது தமிழகம் முழுவதும் அறப்போராட்டம் பரவியது, அந்நேரத்தில் திருப்பூரில் தேசபந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த மறியல் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குபற்றினார்.

அதே வருடம் சனவரி 10 ஆம் தேதியன்று அவர் கையில் தேசியக் கொடியினை ஏந்தித் தொண்டர் படைக்குத் தலைமை ஏற்றார். அவர்கள் அணிவகுத்துச் சென்றபோது காவலர்களால் தாக்கப்பட்டு, தடியடிபட்டு, மண்டை பிளந்து கையில் இந்தியத் தேசியக் கொடியை ஏந்தியபடி மயங்கி விழுந்தார். பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சனவரி 11 இல் உயிர் துறந்தார். இதனால் இவர் கொடிகாத்த குமரன் என்றும் அழைக்கப்படுகிறார்.

36. திருப்பூர் குமரன் ஏன் கொடிகாத்த குமரன் என்று அழைக்கப்படுகிறார்?

........................................................................................................................................

........................................................................................................................................

37. அறப்போராட்டத்தில் திருப்பூர் குமரனின் பங்கு என்ன?

........................................................................................................................................

........................................................................................................................................

38. கொடிகாத்த குமரன் எவ்வாறு உயிர் துறந்தார்?

........................................................................................................................................

........................................................................................................................................

39. குமரன் எதற்காக குடும்பத்துடன் திருப்பூருக்கு இடம் பெயர்ந்தார்?

........................................................................................................................................

........................................................................................................................................

40. திருப்பூர் குமரன் தனது பதின்ம வயதில் என்ன செய்தார்?

........................................................................................................................................

........................................................................................................................................

**X. கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை கருத்தூன்றிப் படித்து 41 முதல் 45 வரையுள்ள வினாக்களுக்குப் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**குறிப்பு : வேற்றுமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்து எழுதவும்.**

**(மதிப்பெண்கள் 5 x 1 = 5)**




41. இந்நிகழ்ச்சி யாரால் நடத்தப்பட்டது..........................................................................................................

42. சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்பவர்கள் யாவர்?

.................................................................................... ....................................................................................

.................................................................................... ....................................................................................

43. விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகள் யாவை ? (ஏதேனும் இரண்டைக் குறிப்பிடவும்)

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

44. நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நான்கு பெரியவர்களுக்கான கட்டணம் எவ்வளவு?

..........................................................................................................................................................................

45. நிகழ்ச்சி எங்கு, எப்பொழுது நடைபெற்றது?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

**XI. பின்வரும் 46 முதல் 49 வரையுள்ள வினாக்களுக்கு ஆங்கில வாக்கியங்களை தமிழுக்கும், தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்து எழுதுக.**
**(மதிப்பெண்கள் 4 x 2 = 8 )**

46. நாங்கள் வீட்டிலிருந்து இணையத்தளத்தின் மூலம் தமிழ் படித்தோம்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

47. வாடிக்கையாளர் கடைக்காரரிடம் பணத்தைக் கொடுத்தார்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

48. My parents and I went to a movie yesterday

..........................................................................................................................................

..........................................................................................................................................

49. His grandfather goes to the library everyday to read the newspaper.

..........................................................................................................................................

..........................................................................................................................................

**XII.கட்டுரை எழுதுதல்**

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. (மதிப்பெண்கள் 20)**

50. (அ) “தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கைச்சூழலில் எனது பொழுதுபோக்கு”

(அல்லது)

(ஆ) வீட்டிலிருந்து இணையத்தளத்தைப் பயன்படுத்தி கல்வி கற்பதைப் பற்றிய உங்கள் தனிப்பட்ட கருத்தை எழுதுக.

*திட்டமிடல் :*

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW Federation of Tamil Schools Inc.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2020